ஒன்றிய அரசு மக்களைப் பிளவுபடுத்தியதால்

மணிப்பூர் எரிந்து கொண்டிருக்கிறது!

தென்காசியில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

தென்காசி ஜூன் 30-

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியம் கரிவலம்வந்தநல்லூரில் உள்ள வடக்கு ரத வீதி அண்ணா திடலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சங்கரன் கோவில் வடக்கு ஒன்றிய செயலாளர் மதிமாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழகத் துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியம் கரிவலம்வந்தநல்லூர் வடக்கு ரத வீதி அண்ணா திடலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சங்கரன்கோவில் வடக்கு ஒன்றிய செயலாளர் மதிமாரிமுத்து தலைமையில் மோகன்குமார், அழகையா ரவி,ஸ்தேவான், சண்முகத்தாய் வடிவேலு முருகன்,முருகேசன்,மாரியப்பன், மைக்கேல் நெல்சன்,கனகராஜ், வெள்ளத்துரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன், தொகுத்து வழங்கினார். பொதுக்குழு உறுப்பினர் தேவா என்ற தேவதாஸ் வரவேற்புரை ஆற்றினார்.

தொடர்ந்து தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் ச.தங்கவேலு ஆகியோர் உரையாற்றினர்.

கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.கரிவலம் அரசு பள்ளியில் 10 ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் முதல் 3 இடங்களைப் பிடித்த மாணவ மாணவிகளுக்கு ஊக்கத்தொகை மற்றும் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசியதாவது:-

தலைவர் கலைஞர் அவர்கள் எத்தனை பேர் வாழ்க்கையை உயர்த்தி தந்திருக்கிறார் என்பதை பற்றி ஒவ்வொரு நாளும் பேச முடியும் அது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டிலேயே தமிழ்நாட்டை தாண்டி எங்கு மக்களை சந்திக்கும் பொழுதும் அவரைப் பற்றி அவர் தன்னுடைய வாழ்க்கையை எப்படி மாற்றி தந்திருக்கிறார்,எப்படி முன்னேற்றிக் காட்டி இருக்கிறார் என்று ஒவ்வொரு நாளும் மக்கள் தங்களுடைய தலைவரை நம்மோடு பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு தலைவர் வாழ்ந்திருக்கிறார் என்றால் தலைவர் கலைஞர் அவர்கள் மட்டும்தான்.

தூத்துக்குடியில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களை சந்தித்தபோது அவர்களின் இரண்டு பேர் என்னோடு பேசிக்கொண்டிருந்த போது குறிப்பிட்டார்கள்,எங்களது பெற்றோருக்கு படிக்கும் வாய்ப்பை உருவாக்கி தந்தது திராவிட முன்னேற்றக் கழகம் தலைவர் கலைஞர் அவர்கள் தான்.இன்று சென்னையில் ஒரு சாதாரண குடும்பத்தில் இருந்து வரக்கூடிய என்னுடைய பின்புலத்தில் வரக்கூடிய ஒரு இளைஞன் சென்னையிலே ஐடி நிறுவனத்தின் நல்ல சம்பளத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறான்,என்று சொன்னால் அதற்கு காரணம் தலைவர் கலைஞர் அவர்கள்.நான் அவர் பள்ளியில் கொண்டு வந்த கணினி பாடம் என்பதுதான்,முதல் முதலாக ஐடி என்றால் என்ன கம்ப்யூட்டர் என்றால் என்ன சொல்லித்தந்தது,அவர் உருவாக்கியடைட்டல்பார்க்கினால் நான் பணியாற்றிக் கொண்டிருக் கிறேன் என்று பெருமையோடு சொன்னார். இளைஞனை காணும் பொழுது தலைமுறை,தலைமுறையாக இங்கே இருக்கக் கூடிய கழகத்தின் முன்னோடிகள் எல்லோரும் கலைஞர் அவர்களை சந்தித்து இருப்பார்கள். அவர்களோடு பேசியிருப்பார்கள், அவர்களுக்கு நம்மோடு பகிர்ந்து கொள்வதற்குஎத்தனையோ கதைகள் இருக்கின்றன. அதைத் தாண்டி இன்றைய தலைமுறையை சேர்ந்த இளைஞர்களும் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய திட்டத்தால் பயன் பெற்றிருக்கிறோம் என்று பெருமையாக சொல்லக்கூடியதை எண்ணிப் பார்க்கும்போது, இப்படிப்பட்ட தலைவன் நம்மோடு இருந்திருக்கிறார் என்றும் அவர்கள் நினைவுகளாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லும் பொழுது அந்த பெருமை ஒவ்வொரு முறையும் நம்முடைய அண்ணன் கழகத் தலைவர் அவர்கள் திராவிட மாடல் ஆட்சி என்பது தலைவர் கொண்டு வந்த ஆட்சி அதன் மீது நீட்சி என்று பெருமையோடு குறிப்பிட்டு சொல்கிறார்.

கலைஞர் தொடாத பரிமாணங்கள் கிடையாது

கலைஞர் அவர்கள் தொடாத பரிமாணங்களே கிடையாது.அவர் தன்னுடைய பள்ளி பருவத்திலேயே பத்திரிகை தொடங்கி கையெழுத்து பிரதியாக தொடங்கி,அதை சொந்த ஊரில் இருக்கக் கூடியவர்களுக்கு விநியோகம் செய்து தன்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்தி,சின்ன ஊரில் நாடகங்கள் நடத்தி,கட்சி பணிகளை துவக்கியவர் கலைஞர். தன் கைகளிலே கொடியை ஏந்தி கொண்டு இந்தி பெண்ணே வெளியேறு என்று 13 வயதிலேயே தன்னுடைய போராட்டத்தை தொடங்கிய தலைவர் கலைஞர். அவர் எந்தத் துறையிலும் வெற்றி காணாமல் இருந்ததில்லை, காரணம் அவருடைய உழைப்பு, மக்கள் மீது இருந்த அன்பு.

தமிழ்நாட்டு மக்களுடைய அவல நிலையை,வலிகளை,ஏற்ற தாழ்வுகளை, சாதி என்ற பெயரால் இருக்கக்கூடிய சமரசமற்ற நிலையை மாற்றிவிட வேண்டும் என்று தன் வாழ்நாள் முழுவதும் உழைத்த தலைவர் கலைஞர். பராசக்தி படத்திலே கை ரிக்ஷாவை பற்றி ஒரு வசனத்தை வைத்திருப்பார். ஆட்சி பொறுப்பிற்கு வந்த பிறகு அந்த கை ரிக்ஷாக்களை ஒழித்து கட்டியதலைவர் கலைஞர்,மனிதனை மனிதன் அமர வைத்துக் கொண்டு ஓடக்கூடாது என்று அதை ஒழித்து சைக்கிள் ரிக்ஷாவை கொண்டு வந்தவர் கலைஞர், கண்ணாளி வழங்கக்கூடிய திட்டம்.

ஒவ்வொரு வாய்ப்புகள் வசதியற்ற வர்களுக்கு கல்லூரி வழங்கக்கூடிய திட்டத்தை கொண்டு வந்த தலைவர் கலைஞர் அவர்கள்.பிச்சைக்காரர்கள் வாக்கு வங்கி இல்லை,எப்படி மாற்றுத்திறனாளிக்கு, திருநங்கைகளுக்கு,சமூகத்தில் யாரை எல்லாம் ஒதுக்கி வைத்திருந்தோமோ

அவர்களுக்கெல்லாம் இந்த சமூகத்தில் காட்டவில்லையோ அவர்களுக்கு எல்லாம் உதவிக்கரம்,அரவணைப்பு கரம் நீட்டியவர் தலைவர் கலைஞர்.

சென்னையில் பரனூரில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை காணச் சென்றேன். இப்போது தொழு நோயை பார்த்தால் சரி செய்யக்கூடிய வசதி இருக்கிறது. அப்போது பாதிக்கப்பட்டவர்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பல பேர் இருந்திருக்கிறார்கள்.அவர்களுக்கு ஒரு காப்பகத்தை உருவாக்கி அவர்களையும் பாதுகாத்த தலைவர் கலைஞர் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்கள் இல்லை என்றால் எங்கள் குடும்பத்தில் இருக்கக்கூடியவர்களே எங்களை வீட்டில் வைத்திருக்க அருவருப்பாக நினைத்தார்கள், சங்கடப்பட்டார்கள், அவர் இல்லை என்றால் நாங்கள் உயிரோடு கூட இருந்திருக்க முடியாது என்று சொல்லி கண்ணீர் மல்க அங்கிருந்த பெரியவர்கள் சொன்னார்கள்.

இப்படி ஒவ்வொன்றாக செய்தவர் கலைஞர்.விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் கொண்டு வந்தவர் கலைஞர் அவர்கள்.கடந்த ஆட்சியிலே அந்த திட்டத்தை முடக்கி போட்டனர். விவசாயிகளுக்கு இலவச மின்சார வழங்காமல் வைத்திருந்தார்கள்.இன்று கழக அரசு மறுபடியும் ஆட்சிக்கு வந்ததும் அண்ணன் தளபதி அவர்கள் 1லட்சத்திற்கு மேல் விவசாயிகளுக்கு மீண்டும் அந்த இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் கடனை ரத்து செய்தவர் கலைஞர்.குடிசை மாற்று வாரியத்தை நாட்டில் முதலில் உருவாக்கிய தலைவர் கலைஞர். சமூகத்தில் சாதி ஒழிய வேண்டும் ஒவ்வொருவருக்கும் ஒரு தெரு இருக்கிறது,எல்லோரையும் ஒரு இடத்தில் கொண்டு வந்து சாதி என்ற கட்டமைப்பை உடைத்து சமத்துவபுரம் உருவாக்கி காட்டிய தலைவர் கலைஞர்.

108 ஆம்புலன்ஸ் கொண்டு வந்தவர் கலைஞர்.இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இங்கு நிறைய பெண்கள் இருக்கிறீர்கள் தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டோம் என்றால் அதிகமாக கல்லூரியிலேயே படிக்கக் கூடியவர்கள், பட்டாதாரிகள் இருக்கக்கூடியவர்கள், பெரிய மாநிலங்களில்,முதலாவது இடத்தில் இருக்கக்கூடியது தமிழ்நாடு அதற்கு காரணம் தலைவர் கலைஞர். அனைத்து ஊர்களிலும் கல்லூரிகளை துவக்கி யாருக்கெல்லாம் வாய்ப்பில்லையோ அவர்களுக்கு எல்லாம் வாய்ப்புகளை உருவாக்கி கொடுத்தவர் கலைஞர்.

ஒன்றிய அரசு இரண்டு முறை ஆட்சி செய்து விட்டது அவர்கள் கனவில் கூட சதவீதத்தை எட்டிப் பிடிக்க முடியாத அளவிற்கு அதை தாண்டி நின்று கொண்டிருக்கிறோம் என்றால் அது தலைவர் கலைஞர் அவர்களின் சாதனை தவிர வேறு ஒன்றும் இல்லை. இப்படி ஒவ்வொரு திட்டமாக கொண்டு வந்து யார் எல்லாம் இந்த சமூகத்தில் விடுபட்டார்கள், விடுபட்டு இருக்கிறார்கள், யாரையெல்லாம் இந்த சமூகம் கண்டு கொள்ளவில்லையோ, யாரெல்லாம் சமூகத்தில் அடித்தட்டிலே இருந்து கொண்டிருக்கிறார்களோ அத்தனை பேரையும் அரவணைத்த தலைவர் கலைஞர் அவர்கள். அவர்கள் வந்த வழியிலே இன்று நம்முடைய தளபதி அவர்கள் மக்களை தேடி மருத்துவம் ஒரு மகத்துவமான திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள் முன்னேறிய நாடுகளில் கூட இந்த திட்டம் கிடையாது. வீடு தேடி வந்து மருந்து,மாத்திரைகளை கொடுப்பது தான் மக்களை தேடி மருத்துவம் திட்டம். மருத்துவமனையில் மாத கணக்கில் காத்திருக்க வேண்டும். மருத்துவர் அனுமதி கிடைப்பதற்காக, ஒரு அறுவை சிகிச்சைக்காக மாதக் கணக்கில் காத்துக் கொண்டிருக்க வேண்டும்.

மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய்!

ஆனால் மருத்துவமனைக்குவர முடியாதவர்கள் கூட விட்டு விடக்கூடாது என்பதற்காக உங்க வீட்டுக்கு வீடு தேடி வந்து மருத்துவர்கள் சிகிச்சை அளித்து மருந்துகளை கொடுத்து செல்கிறார்கள். திட்டம் தான் மக்களை தேடி மருத்துவ திட்டம் மிகச் சிறப்பானது. மதிய உணவுத் திட்டம் பெருந்தலைவர் காமராஜர் கொண்டு வந்தது அது உண்மையான சத்துணவு திட்டமாக முட்டையை வழங்கியது தலைவர் கலைஞர் அவர்கள்.ஆனால் இன்றைய நம் முதல்வர் தளபதி அவர்கள் காலை சிற்றுண்டி திட்டத்தை கொண்டு வந்து உள்ளார்கள்.

பெண்கள் படிக்க வேண்டும் என்பதற்காக திருமண உதவித் தொகையை தொடங்கியவர் தலைவர் கலைஞர். இப்பொழுது பெண்கள் படிக்க ஆரம்பித்து விட்டார்கள் கல்லூரிக்கு போக ஆரம்பித்து விட்டார்கள். அதனால் அந்த திட்டத்தை இப்பொழுது மாற்றி எவ்வளவு படித்தாலும் படித்துக் கொள்ளுங்கள் மாதம் ரூபாய் 1000 வழங்குகிறேன் என்று திட்ட அறிவித்து திட்டத்தை வழங்கிக் கொண்டிருப்பவர், வழங்கிக் கொண்டிருக்கிற ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. திராவிட மாடல் ஆட்சியாகும்.

வருகிற செப்டம்பர் மாதம் உங்களுக்கு ரூபாய் 1000 குடும்பத் தலைவிக்கு வழங்க போகிறோம் என்பதை அண்ணன் தளபதி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.திராவிட முன்னேற்ற கழகம் சொன்னால் செய்யும். நல்ல தொலைக்காட்சி பெட்டியை கொடுக்க முடியாது என்று சொன்னார்கள்,சும்மா சொல்கிறார் என்றார்கள் ஆனால் அத்தனை பேருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டியை தந்த தலைவர் கலைஞர் அவர்கள்.இன்று பல பேருடைய வீடுகளில் அந்த தொலைக்காட்சி பெட்டி பயன்பாட்டிலேயே உள்ளது.

சென்னையில் கவர்னர் ஒருவர் இருக்கிறார் எந்த கோப்புகளை அனுப்பினாலும் கையெழுத்து போடவில்லை. சட்டமன்றத்திலே ஆளுநர் உரை என்பது அரசு என்ன கொடுக்கிறதோ அதை படிக்க வேண்டும். கருத்து வேறுபாடு இருந்தால் முன்கூட்டியே சொல்ல வேண்டும்.

இது எல்லாம் விட்டுவிட்டு சட்டமன்றத்தில் மாற்றி படிக்கக்கூடிய உரிமை ஆளுநருக்கு கிடையாது. நம்முடைய தலைவர்களை கொச்சைப்படுத்தக் கூடிய ஆளுநரை சட்டமன்றத்தை விட்டு வெளியேற செய்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. எனவே ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும் நம்மை அச்சுறுத்தி விடலாம் என்று இவர்கள் நினைத்தால் கடைசியில் ஓட போறது யார் என்று அவர்களுக்கு தெளிவாக தெரிந்து விட்டது.நீங்கள் தான் வெளியே போனீர்கள் நாங்கள். அங்கு தான் நின்று கொண்டிருக்கிறோம்.

எல்லா மாநில அரசுகளையும் கழுத்தைப் பிடித்து நிறுத்துவது போல தன் கையில் இருக்கக்கூடிய பல்வேறு ஆயுதங்களை பயன்படுத்தி அவர்களை அச்சுறுத்தி விடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்,மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொண்டு வருகிறார்கள்.100 நாள் வேலைக்காக ஒன்றிய அரசாங்கம் தரவேண்டிய பணத்தை தருவதே இல்லை.இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்க வேண்டிய பணத்தை ஒவ்வொரு ஆண்டும் குறைத்துக் கொண்டு வந்து இந்த ஆண்டு மிகக் குறைவாக ஒதுக்கி இருக்கிறார்கள் அதற்குப் பிறகு ஏத்தி தருகிறோம் என்று சொன்னார்கள்.மேற்கு வங்காளத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தில் இதுவரைக்கும் இரண்டு வருடமாக வேலை செய்தவர்களுக்கு சம்பளம் கொடுக்கவில்லை.இப்படி மாநிலங்களை பழிவாங்கிக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. அவர்களை வீட்டுக்கு அனுப்பவேண்டும். இந்தியாவில் ஆட்சி மாற்றம் வர வேண்டும்.

இந்தியாவில் ஒரு ஆட்சி மாற்றம் வர வேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.பல கட்சிகளை ஒருங்கிணைத்து முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். பாட்னா மிகப்பெரிய மாநாட்டில் எதிர்க்கட்சிகள் கலந்து கொண்ட ஒரு கூட்டம் நடைபெற்றது.அந்த கூட்டத்தின் பயனாக நிச்சயமாக எதிர்க்கட்சிகள் அத்தனை பேரும் ஒருங்கிணைந்து மத்தியிலே வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலை நாட்டிலே ஒரு மாற்றத்தை, ஒரு நல்ல ஆட்சியை,அத்தனை பேருக்குமான ஆட்சியை, அதானிகளுக்கும்,அம்பானிகளுக்குமான,ஆட்சியாக இல்லாமல்,சாதாரண சாமானிய மக்களுக்கான ஆட்சியை, வேலை வாய்ப்புகளை வழங்கக்கூடிய ஆட்சியை,இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள்,அத்தனை விதத்திலும் ஒருங்கிணைந்து வாழக்கூடிய, ஒற்றுமையாக வாழக்கூடிய,ஒரு நிலையை உருவாக்கக்கூடிய ஆட்சியை, ஜாதி,மதத்தால்,மக்களை பிளவுபடுத்தி மணிப்பூர் எரிந்து கொண்டிருக்கிறது. இதுவரைக்கும் பிரதமர் கண்களிலே படவில்லையே.வெளிநாடுகளில் இருந்து கொண்டு இருக்கிறார்.

எங்கிருந்தால் என்ன? ஆனால் இப்படி மக்களைப் பிரித்து பிரித்து அங்கே வன்முறைகளை எரியவிட்டு அதில் குளிர்காய்ந்து கொண்டிருக்கிற ஆட்சியை மாற்ற வேண்டிய நிலை வந்துவிட்டது.அந்த ஆட்சி மாற்றம் என்பது தமிழகத்தில் துணையோடு மாறப் போகிறது.முதல்வர் அவர்கள் துணையோடு அந்த ஆட்சி மாற்றம் உருவாகும்.

தமிழ்நாட்டில் நம்முடைய கூட்டணி முழுமையாக வெற்றி பெற வேண்டும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு அத்தனை பேரும் பணியாற்ற வேண்டும். மதத்தாலேயோ, சாதியாலேயோ சாதியின் பேரால் காழ்ப்புணவுர்களை வெறுப்பை பொதுவாக்கி போராட்டங்களை வன்முறை தூண்டிக் கொண்டிருந்தால் முதலில் பாதிக்கப் போவது பெண்கள்தான். அடுத்து நம் குழந்தைகள்.ஒவ்வொரு வன்முறைக்கு பின்னாலும் ஒரு மிகப்பெரிய வலிகளை தாங்கிக் கொள்ளக் கூடியவர்கள் பெண்கள். ஆதலால் நம்முடைய உரிமைகள் தான் முதலில் பாதிக்கப்படும்.நம்மை பாதுகாத்துக் கொள்ள நம் அடுத்த தலைமுறை பாதுகாக்க ஒரு நல்லாட்சி ஆரோக்கியமான ஆட்சி மத்தியில் உருவாக வேண்டும்.அந்த ஆட்சி மாற்றத்திற்காக முதல் தூதுவராக இங்கு இருக்கக்கூடிய சகோதரிகள் பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசினார்.

கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு,மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் முத்துச்செல்வி, மாவட்ட அவை தலைவர் பத்மநாதன்,துணை செயலாளர்கள் ராஜதுரை, மனோகரன், புனிதா, பொருளாளர் சரவணன், பொதுக்குழு உறுப்பினர்கள் பராசக்தி,வேல்சாமி பாண்டியன், மாரிச்சாமி,மகேஸ்வரி,

ஒன்றிய செயலாளர்கள் லாலாசங்கர பாண்டியன், பூஜைபாண்டியன், கடற்கரை, சேர்மதுரை, கிறிஸ்டோபர், வெற்றி விஜயன், பெரியதுரை, ராமச்சந்திரன், முத்தையாபாண்டியன்.

நகரச் செயலாளர்கள் பிரகாஷ், அந்தோணிசாமி, பேரூர் செயலாளர்கள் ரூபி பாலசுப்பிரமணியன், மாரிமுத்து, கேடிசி குருசாமி, சங்கரன்கோவில் நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி,

அணி அமைப்பாளர் காசிராஜன், விஜயா கிரிப்சன், சந்திரன், சரவணன், அப்பாஸ் உள்பட கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மகளிர் அமைப்பாளர் சிவசங்கரி, தொண்டரணி அமைப்பாளர் பிரபாவதி, ஒன்றிய அமைப்பாளர் யோகேஷ் குமார் ஆகியோர் நன்றியுரையாற்றினர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமுல்லைவாயில் சத்தியமூர்த்தி நகரில் பகுதியில் ஆவடி மாநகராட்சி அரசின் மேல்நிலைப் பள்ளியில் புதிய நூலகம் வேண்டும் என்று கோரிக்கை வைத்து நிலையில் 50 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய நூலகம் கட்ட பணிகளை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்து பள்ளி ஆசிரியர்களுக்கு மாணவ மாணவியர்களுக்கு இனிப்பு வழங்கினார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி. உதயகுமார், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், மண்டல குழு தலைவர் அமுதா பேபிசேகர், பகுதிச் செயலாளர் பேபிசேகர் உள்பட அரசு அதிகாரிகள் பள்ளி ஆசிரியர்கள் கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் மாணவ மாணவிகள் உள்ளனர்.

தமிழ்நாடு அரசு
சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டை பேரூராட்சி
ந.க.எண்.033 / 2023/அ1 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரண்டு உறைகள் முறை) — நாள்.23.06.2023

சிவகங்கை மாவட்டம், நாட்டரசன்கோட்டை பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம் (TURIP) - 2023-24ன் கீழ். மூவேந்தர் குறுக்குத் தெரு, மருதுபாண்டியர் குறுக்குத்தெரு 1 மற்றும் 2, வள்ளலார் குறுக்குத் தெரு, கண்ணப்பர் குறுக்குத் தெரு, இலுப்பக்குடி அய்யனார் கோவில் ரோடு, இலுப்பக்குடி சமுதாயக்கூடம் ரோடு, புதுவளவு, கண்ணனாத்தாள் கோவில் அருகில் , காந்திஜி நெரு முதல் தீர்த்தாக்குளம் வரை மற்றும் நக்கீரர் குறுக்குத் தெரு ஆகிய இடங்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் ரூ.119.00/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in மற்றும் http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களை அலுவலக நாட்களில், அலுவலக நேரத்தில் நாட்டரசன்கோட்டை பேரூராட்சி அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.
2. மதிப்பீட்டில் 1 சதவீதம் வைப்புத் தொகை செலுத்த வேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :

அ) முன் கலந்தாய்வு கூட்டம்	03.07.2023 காலை 11.00 மணி
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	11.07.2023 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல்	11.07.2023 மாலை 3.30 மணி

4. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

ஒம்//கா. செயகுருகன், செயல் அலுவலர், நாட்டரசன்கோட்டை பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம்.
ஒம்//க.பிரியதர்சினி தலைவர், நாட்டரசன்கோட்டை பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம்
செ.ம.வே.நா.இ./3328/ ஒப்பந்தப்புள்ளி / 2023
சோதனை கடந்து வருந்திறம் கூடத்திறோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

கலைஞரும் தமிழும்!

(பேராசிரியர் சுப.வீரபாண்டியனின் ஒரு நிமிடச் செய்தி!)

சில ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்த நண்பர் ஒருவர், தான் கொல்கத்தா பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆய்வினை மேற்கொண்டிருப்பதாகச் சொன்னார்.

"கொல்கத்தாவில் தமிழ் ஆய்வுக்கு இடம் இருக்கிறதா?" என்று கேட்டேன்.

"ஆம் அய்யா, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதே, அதற்கான ஏற்பாடுகள் நடந்து விட்டனவே!" என்று சொன்னார்.

பிறகுதான், நான் செய்திகளைத் தேடித் தெரிந்துகொண்டேன்.

1971-ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் அவர்கள், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கையை உருவாக்கியிருக்கிறார்.

ஆந்திராவில் இருக்கிற வேங்கடேஸ்வரா பல்கலைக் கழகம், உஸ்மானியா பல்கலைக் கழகம், திருவனந்தபுரத்தில் இருக்கிற கேரளா பல்கலைக் கழகம், அதேபோல, ஆக்ரா பல்கலைக் கழகம், கொல்கத்தா பல்கலைக் கழகம் என 5 பல்கலைக் கழகங்களில், 1971ஆம் ஆண்டே, தமிழ் இருக்கையை உருவாக்கி, தமிழ்ப் பேராசிரியர் ஒருவரையும் அமர்த்தி, அந்தச் செலவுகளை தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

1971 முதல் 1975 வரையில் 2 கோடியே 13 லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா முழுவதும் தமிழைப் பரப்பிட, தலைவர் கலைஞர் அவர்கள் செய்த பணி அது.

பேராசிரியர்
சுப.வீரபாண்டியன்

தமிழ்நாட்டின் புதிய டி.ஜி.பி.யாக

சங்கர் ஜிவால் நியமனம்!

சென்னை, ஜூன் 30-

தமிழ்நாட்டின் புதிய டி.ஜி.பி.,யாக சங்கர் ஜிவால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு காவல் துறையின் தலைவராக இருக்கும் டி.ஜி.பி. சி.சைலேந்திரபாபு இன்றுடன் (ஜூன் 30) பணி ஓய்வு பெறுகிறார். இந்நிலையில், புதிய டி.ஜி.பி.க்கான பட்டியலை தேர்வு செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த 22-ஆம் தேதி டெல்லியில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ்நாடு தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, உள்துறைச் செயலர் அமுதா, தற்போதைய டி.ஜி.பி. சைலேந்திரபாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்படி, தமிழ்நாட்டின் புதிய டி.ஜி.பி.யாக சென்னை காவல் ஆணையராக உள்ள சங்கர் ஜிவால் தேர்வு செய்யப்பட்டுள்ளார். சங்கர் ஜிவால் தமிழ்நாடு காவல் துறையின் புதிய தலைவராகவும், சட்டம் - ஒழுங்கு டி.ஜி.பி.யாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சென்னை புதுக்கல்லூரியில் முனைவர் அ.ரசித்கான் எழுதிய சமூகம் சந்தித்த கொரோனா பாக்கம் 1,2,3 நூலை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார். இந்நிகழ்ச்சிக்கு ஜனாப் இலியாஸ்சேட் தலைமை வகித்தார். நடிகர் இராஜேஷ், எழுத்தாளர் அஜயன் பாலா, கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதில் முனைவர் எம்.எஸ்.ஏ. அஸ்ரார் ஷெரீப், முனைவர் எம்.எஸ்.ஏ. ஜபருல்லாகான் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

துறையூர் க. மகாராசன்
ஜூன் 30 (2014)

இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

துறையூர் நகரத்தில் மாவட்ட பிரதிநிதியாகவும், அதன் பின்னர் இருபத்தோறு ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

1986–ல் நகர்மன்றத் தலைவராகவும், 2006–ல் நகர்மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.